# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


“தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்”

தேதி: 08.10.2022

## இனிய மிலாது நபி வாழ்த்துகள் !

**அண்ணல் நபிகள் நாயகத்தின் பிறந்தநாளை மிலாது நபியாகக் கொண்டாடும் இஸ்லாமிய பெருமக்களுக்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**“இறைவன் உங்கள் பக்கம் இருக்கும்போது எந்த சக்தியாலும் உங்களை எதுவும் செய்துவிட முடியாது”** என்ற நபிகளாரின் நம்பிக்கையை என்றைக்கும் மனதில் கொள்வோம். பெற்றோரை வணங்குதல், உழைப்பைப் போற்றுதல், மன்னித்தலின் மாண்பு என உன்னத வாழ்வியலுக்கு நபிகள் போதித்த கருத்துகளை மறவாது பின்பற்றிடுவோம்.

இறை தூதராக அவதரித்து, நம்பிய மக்களைக் காத்து நின்று, நல்லிணக்கத்தைப் போற்றி, **‘அன்பு தான் உலகில் ஆகப்பெரிய சக்தி’ என்பதை போதித்த நபி பெருமகனாரின் பிறந்தநாளில் உலகில் அமைதியும், மகிழ்ச்சியும் அனைவரிடமும் நிலைத்து நிற்கட்டும் என வாழ்த்துகிறேன்.**

**டிடிவி தினகரன்**